சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்
முன்னிலை : திரு. M. சிவாஜி செல்லையா, L.L.M.,
சார்பு நீதிபதி, உத்தமபாளையம்.

2026 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 12–ம் நாள் புதன்கிழமை

அசல் வழக்கு எண். 318/2025

CNR No.TNTH050004552025

கனரா வங்கி, எரசக்கநாயக்கனூர் கிளை
அதன் கிளை மேலாளர் மூலம், .... வாதி

/எதிர்/

1. R. ரஞ்சித்குமார்
2. R.ரவி* .... பிரதிவாதிகள்

(*) அசல்வழக்கு நிலுவையிலிருக்கும்போது 2ம் பிரதிவாதி இறந்துவிட்டார் என்பதனை வாதி கடந்த 12.01.2026ம் தேதியன்று 2ம் பிரதிவாதியான ரவி இறந்துவிட்டதால் அவரை இவ்வழக்கிலிருந்து exonerate செய்து ஒரு குறிப்பாணையை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அது இந்நீதிமன்றத்தால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கு 10.07.2026ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்பு விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. M.முருகதினகரன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் அழைத்தும் ஆஜராகாததால் அவர்கள் தோன்றாத்தரப்பினர் ஆக்கப்பட்டும், வாதி தரப்பு வாதுரைக்கு கேட்பு நல்கியும் முன்னிடப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

## தீர்ப்புரை

வாதிக்கு பிரதிவாதிகள் வழக்குத்தொகை ரூ.3,20,000/–க்கு வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் தொகை முழுவதும் வசூலாகும் காலம்வரை 10.60% வட்டி செலுத்தக்கோரியும், இவ்வழக்கின் செலவுதொகையை வாதிக்கு பிரதிவாதிகள் செலுத்தக்கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்

வாதி வங்கியில் 1,2 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியின் கல்விக்காக வேண்டி ரூ.1,50,000/–ஐ கேட்டு கடந்த 26.10.2015ம் தேதி வாதி வங்கியை அணுகியதில் வாதி வங்கி கடனை வழங்க முன் வந்தது என்றும், அவர்களின் வேண்டுகோளை ஏற்று கடந்த 04.11.2015ம் தேதி ரூ.1,50,000/–ஐ வழங்கியது என்றும், அதன்பேரில் வாதி வங்கிக்கு தேவையான அனைத்து கடன் ஆவணங்களையும் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றும், மேற்படி கடனுக்கு பிரதிவாதிகள் 11.15% வட்டி மற்றும் 120 மாதத்தில் திருப்பி செலுத்த

ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்றும், மேற்கண்ட கடன் தொகைகளின் தவனைகள் தவறும்பட்சம் அபராத வட்டி சேர்த்து செலுத்தவும் ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்றும், மேலும், வாதி வங்கியில் பிரதிவாதிகள் பெற்ற அசல் மற்றும் வட்டித்தொகைகளை செலுத்தக்கோரி பலமுறை நேரிலும் ஆட்கள் மூலமும் துயர்ந்தும், பிரதிவாதிகள் யாதொரு தொகையும் செலுத்தாமல் செலுத்தி விடுவதாகவே கூறி வீண் காலம் கடத்தி வந்தார்கள் என்றும், 07.09.2018, 15.03.2021, 07.03.2024, ம் தேதிகளில் கடனை ஒத்துக்கொண்டு உயிர்பிப்பு கடிதம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றும், ஆனால் வாதி வங்கியில் பிரதிவாதிகள் பெற்ற கடனை ஒப்புக்கொண்டபடி திரும்ப செலுத்தாமல் வீண் காலதாமதம் செய்து வருவதால் வாதி வங்கியால் பிராதில் கண்ட கடன் தொகையை வட்டி மற்றும் செலவுத்தொகையுடன் திரும்பப்பெற வேண்டி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) 1ம் பிரதிவாதி அழைத்தும் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் தோன்றாத்தரப்பினராக ஆக்கப்பட்டுள்ளார்.

4) <u>பிரச்சனை மற்றும் அதற்கான தீர்வு</u>

1. வாதி வங்கி கோரியுள்ள பரிகாரம் செலவுத்தொகையுடன் கிடைக்கக் கூடியதா?

5) வாதி தரப்பு வழக்கை நிரூபணம் செய்யக்கூடிய வகையில் வாதி வங்கியின் கிளை மேலாளர் முரளிதரன் வாசா 1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலமாக 26.10.2015ம் தேதிய வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் சமர்பித்த விண்ணபத்தின் அசல் வா.சா.ஆ.1 ஆகவும், 04.11.2015ம் தேதிய பிரதிவாதிகள் சமர்ப்பித்த விண்ணப்பத்தின் அடிப்படையில் வாதி வங்கி வழங்கிய அனுமதி கடிதத்தின் அசல் வா.சா.ஆ.–2 ஆகவும், 04.11.2015ம் தேதி பிரதிவாதிகள், வாதி வங்கிக்கு எழுதிக் கொடுத்துள்ள கடன் ஒப்பந்தம் வா.சாஆ.–3 ஆகவும், 24.07.2015 ம் தேதிய Principal, Annai Fathima College of Arts and science, Madurai வழங்கிய போனபைட் சான்றிதழ் வா.சாஆ.–4 ஆகவும், 08.04.2025ம் தேதிய வாதி வங்கியில் உள்ள பிரதிவாதிகளின் வங்கிக் கணக்கு அறிக்கை வா.சா.ஆ.5 ஆகவும், 07.09.2018ம் தேதிய பிரதிவாதிகள், வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்துள்ள உயிர்ப்பு கடிதம் வா.சா.ஆ.6 ஆகவும், 15.03.2021ம் தேதிய பிரதிவாதிகள், வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்துள்ள உயிர்ப்பு கடிதம் வா.சா.ஆ.7 ஆகவும், 07.03.2024ம் தேதிய பிரதிவாதிகள், வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்துள்ள உயிர்ப்பு கடிதம் வா.சா.ஆ.8 ஆகவும், குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) மேலும், மேற்படி வா.சா.1 வாய்மொழி சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்களை பரிசீலனை செய்யும்போது, 1ம் பிரதிவாதியுடைய கல்விக்காக கடந்த 26.10.2015 ம் தேதி பிரதிவாதிகள் கடன் விண்ணப்பம் கொடுத்து அது பரிசீலனை செய்யப்பட்டு 04.11.2015 தேதியில் வாதி வங்கி பிரதிவாதிகளுக்கு கல்விக் கடன் வழங்கி அதற்காக அவர்கள் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான கடன் ஆவணங்களை எழுதிக்கொடுத்து அதன் பின்னர் அசல் மற்றும் வட்டி தொகைகளை திரும்ப செலுத்தவில்லை என்ற விபரம் மேற்படி ஆவணங்கள் மூலம் தெரியவருகிறது. மேலும், வா.சா.ஆ. 6 முதல் வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்களை பரிசீலனை செய்யும்போது வழக்கு உரிய காலத்திற்குள் கடன் தொகையை திரும்பப்பெற தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) மேலும், பிரதிவாதிகள் ஒத்துக்கொண்டபடி கடன் தொகையை திருப்பி செலுத்தவில்லை என்பது வா.சா.ஆ.5 கணக்கு அறிக்கையை பரிசீலனை செய்யும்போது தெரியவருகிறது. எனவே 2ம் பிரதிவாதி இறந்துவிட்டநிலையில் 1ம் பிரதிவாதி கடன் பெற்றுள்ள நிலையில் அவர் ஒத்துக்கொண்டபடி கடன்தொகையை திருப்பி செலுத்த கடமைப்பட்டவர் என இந்நீதிமன்றம் தீர்வு கண்டு, வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு செலவுத்தொகையுடன் கிடைக்கத்தக்கது என இந்த பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

8) அதே வேளையில் 1ம் பிரதிவாதியுடைய கல்விக்காக அவர்கள், வாதி வங்கியிலிருந்து கடன் பெற்றுள்ள நிலையில், அவர்கள் பெற்ற கல்விகடன் மற்றும் அவர்களது குடும்ப சமூக சூழ்நிலையை கருத்தில் கொண்டு வாதி வங்கி 10.60% சதவிகித வட்டி கோரியிருந்தாலும் நீதியின் நலனின் பொருட்டு 9 சதவிகித வட்டி மட்டுமே கல்விக்கடனுக்காக வாதி வங்கிக்கு கிடைக்கக்கூடியது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9) இறுதியாக, வாதியின் வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, 1ம் பிரதிவாதி வாதிக்கு ரூ.3,20,000/- மும் அசல் தொகை ரூ.3,13,460/-க்கு பிராது தேதி முதல் தீர்ப்பு தேதி வரை 9% வட்டியும், தீர்ப்புக்கு மறுநாள் முதல் தொகை முழுவதும் வசூலாகும் தேதிவரை 6% பின்வட்டியும் சேர்த்து செலுத்த வேண்டுமென்று உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது. 2ம் பிரதிவாதியை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு 12.08.2026 ம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

sd/–M.சிவாஜி செல்லையா

சார்பு நீதிபதி,
உத்தமபாளையம்.

வாதி தரப்பு சாட்சி

வா.சா.1 –முரளிதரன் (வாதி வங்கி கிளை மேலாளர்).

வாதி தரப்பு சான்றாவணங்கள்

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 26.10.2015 | கடன் விண்ணப்பம் | அசல் |
| வா.சா.ஆ.2 | 26.10.2015 | பிரதிவாதிகள் சமர்ப்பித்த விண்ணப்பத்தின் அடிப்படையில் வாதி வங்கி வழங்கிய அனுமதி கடிதத்தின் அசல் | அசல் |
| வா.சா.ஆ.3 | 26.10.2015 | பிரதிவாதிகள், வாதி வங்கிக்கு எழுதிக் கொடுத்துள்ள கடன் ஒப்பந்தம் | அசல் |
| வா.சா.ஆ.4 | 24.07.2015 | Principal, Annai Fathima College of Arts and science, Madurai வழங்கிய போனபைட் சான்றிதழ் | அசல் |
| வா.சா.ஆ.5 | 08.04.2025 | வங்கிக் கணக்கு அறிக்கை | அசல் |
| வா.சா.ஆ.6 | 07.09.2018 | உயிர்ப்பிப்பு கடிதம் | அசல் |
| வா.சா.ஆ.7 | 15.03.2021 | உயிர்ப்பிப்பு கடிதம் | அசல் |
| வா.சா.ஆ.8 | 07.03.2024 | உயிர்ப்பிப்பு கடிதம் | அசல் |

பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்

– இல்லை –

sd/–M.சிவாஜி செல்லையா
சார்பு நீதிபதி,
உத்தமபாளையம்.

OS.318/2025
சீரான தீர்ப்புரை
நாள் 12.08.2026

சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்
முன்னிலை : திரு. M. சிவாஜி செல்லையா, L.L.M.,
சார்பு நீதிபதி, உத்தமபாளையம்.

2026 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 12–ம் நாள் புதன்கிழமை

அசல் வழக்கு எண். 318/2025

CNR No.TNTH050004552025

கனரா வங்கி, எரசக்கநாயக்கனூர் கிளை
அதன் கிளை மேலாளர் மூலம், .... வாதி

/எதிர்/

1. தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், சின்னஓவுலாபுரம், காமராஜபுரம், வார்டு எண்.2, கதவு எண்.47, நடுத்தெருவில் வசித்து வரும் ரவி அவர்களின் மகன் இந்துசுமார் 28 வயதுள்ள R. ரஞ்சித்குமார்.

2. தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், சின்னஓவுலாபுரம், காமராஜபுரம், வார்டு எண்.2, கதவு எண்.47, நடுத்தெருவில் வசித்து வரும் ராசு அவர்களின் மகன் இந்துசுமார் 48 வயதுள்ள R.ரவி*.

.... பிரதிவாதிகள்

(*) அசல்வழக்கு நிலுவையிலிருக்கும்போது 2ம் பிரதிவாதி இறந்துவிட்டார் என்பதனை வாதி கடந்த 12.01.2026 ம் தேதியன்று 2ம் பிரதிவாதியான ரவி இறந்துவிட்டதால் அவரை இவ்வழக்கிலிருந்து exonerate செய்து ஒரு குறிப்பாணையை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அது இந்நீதிமன்றத்தால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வாதிக்கு பிரதிவாதிகள் வழக்குத்தொகை ரூ.3,20,000/–க்கு வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் தொகை முழுவதும் வசூலாகும் காலம்வரை 10.60% வட்டி செலுத்தக்கோரியும், இவ்வழக்கின் செலவுதொகையை வாதிக்கு பிரதிவாதிகள் செலுத்தக்கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வழக்கு எழுந்த நாள் | - | 10.10.2025 |
| வழக்குமூலம் எழுந்த நாள் | - | 26.10.2015, 04.11.2015, 07.09.2018, 15.03.2021, 07.03.2024, ஆகிய தேதியில் எரசக்கநாயக்கனூர் கிளையில் உற்பத்தி. |
| தாவா மதிப்பு | - | ரூ. 3,20,000/– |
| நீதிமன்ற முத்திரைக் கட்டணம் | - | நீதிமன்ற முத்திரைக் கட்டணம் சட்டம் பிரிவு 22–ன் படி ரூ.9,600/– செலுத்தப்பட்டுள்ளது, |

இவ்வழக்கு 10.07.2026 ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்பு விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. M.முருகதினகரன் அவர்கள் ஆஜராகியும்,

பிரதிவாதிகள் அழைத்தும் ஆஜராகாததால் அவர்கள் தோன்றாத்தரப்பினர் ஆக்கப்பட்டும், வாதி தரப்பு வாதுரைக்கு கேட்பு நல்கியும் முன்னிடப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

தீர்ப்பாணை

| | |
|---|---|
| 1 | இவ்வழக்கு அனுமதிக்கப்படுகிறது. |
| 2 | பிரதிவாதிகள் வாதிக்கு ரூ.3,20,000/–மும் அசல் தொகை ரூ.3,13,460/–க்கு பிராது தேதி முதல் தீர்ப்பு தேதி வரை 9% வட்டியும், தீர்ப்புக்கு மறுநாள் முதல் தொகை முழுவதும் வசூலாகும் தேதிவரை 6% பின்வட்டியும் சேர்த்து செலுத்த வேண்டுமென்று உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 3 | இவ்வழக்கின் செலவுத்தொகை ரூ.13693/-ஐ வாதிக்கு பிரதிவாதிகள் செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. |

செலவுத்தொகைப்பட்டியல்

| | | | வாதி தரப்பில் | பிரதிவாதிகள் தரப்பில் |
|---|---|---|---|---|
| 1 | நீதிமன்ற முத்திரைக் கட்டணம் | : | 9600.00 | |
| 2 | விண்ணப்பத்திற்கு | : | 10.00 | |
| 3 | வக்காலத்து நாமாவுக்கு | : | 10.00 | |
| 4 | வழக்கறிஞர் கட்டணம் (சீனியர்) | : | 2875.00 | |
| 5 | கட்டளை சேர்ப்பிப்பதற்கு | : | 70.00 | |
| 6 | இடையில் கொடுக்கப்பட்ட மனுக்களின் செலவு தொகை | : | 100.00 | செலவுத்தொகைப்பட்டில் தாக்கல் செய்யப்படவில்லை |
| 7 | பிராசஸ் தயாரித்தல் பீஸ் | : | 20.00 | |
| 8 | பிளிடிங் சார்ஜ் | : | 50.00 | |
| 9 | வழக்கறிஞர் கட்டணம் (ஜீனியர்) | : | 958.00 | |
| | மொத்தம் | | 13693.00 | |

2026ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 12–ம் நாள் எனது கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

sd/–M.சிவாஜி செல்லையா
சார்பு நீதிபதி,
உத்தமபாளையம்.

OS.318/2025
தீர்ப்பாணை
நாள் 12.08.2026